## சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி

## SC No. 106/ 2023

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.சா.8 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மாதவன் | த/பெ.: | முருகன் |
| கிராமம்: | பாமனி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | ஓட்டுநர் |
| வயது: | 25 | முகவரி: | பாமனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 24.03.2025

**முதல் விசாரணை:_**

நான் தற்போது திருத்துறைப்பூண்டி பாமனியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரயை தெரியும். அ.சா.1, அசா.2 ஆகியோர்களை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எதுவும் தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும். அசா.ஆ.3 ஆகும்.** வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதி கேட்டதன் பெயரில் பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

14.02.2022 ஆம் தேதி நான் வேலைக்கு சென்றுவிட்டேன் என்றும், எங்கள் தெருவை சேரந்த சங்கர் என்பவருக்கு சொந்தமான வீட்டில் குடியிருந்த மாரிமுத்துவின் மகள் சந்தியா அன்று மாலை சந்தியா வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கில் தொங்கியுள்ளார் அப்போது விசாரித்தபோது எதிரி லோகேஷ் அப்போது தனியாக இருந்த சந்தியாவை கூப்பிட்டு என்னடி எப்ப பார்த்தாலும் வீட்டிலேயே அம்மா, அப்பாவோடு இருக்கிற என்று கூறியுள்ளார் என்றும், அதன் பின் சந்தியா அழுதுகொண்டே வீட்டிற்குள் சென்று தூக்கு மாட்டிகொண்டதாகவும் பின்னர் மாலை 05.00 மணியளவில் மாரிமுத்துவின் தம்பி சுரேஷ் மாரிமுத்து வீடு சாத்தி இருந்ததால் சத்தம்போட்டு கூப்பிட்ட போது நீண்ட நேரம் ஆகி கதவு திறக்காததால் கதவை திறந்துகொண்டு உள்ளே போய் பார்த்தபோது மூங்கில் கம்பில் துப்பட்டாவில் தூக்குபோட்டு தொங்கி நிலையில் இருந்தார் என்றும் பின்பு தெருகாரர்கள் உதவியுடன் இறக்கி திருத்துறைப்பூண்டிடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது அவர் இறந்துவிட்டார் என்று மருத்துவர் கூறினார். பின்பு இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தபோது 15.02.2022 காலை 10.00 மணிக்கு மாரிமுத்து வீட்டின் முன்பாக என்னையும் தனபால் மகன் இரஞ்சித் என்பவரையும் சாட்சியாக வைத்து வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் நானும் இரஞ்சித்தும் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு போலிசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது எதிரியை இந்த

வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.